# IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,

## KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL

## C.C. No. 11/2025

## Deposition of P.W. 2

**Name** : திரு.ரமேஷ்

**Father's Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Dated** : **17.03.2026**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது வேளிமலை வனச்சரக வேளிமலை தெற்கு பிரிவு வனவராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1வது எதிரியை தெரியும். வழக்கு சம்பவத்தின்போது நான் பூதப்பாண்டி வனச்சரகத்தில் ஆரல்வாய்மொழி பிரிவு வனவராக பணியாற்றி வந்தேன். 4.9.2021 அன்று வனச்சரக அலுவலர் இரவு 10 மணி அளவில் என்னை போன் மூலம் தொடர்பு கொண்டு இரவு ரோந்து பணி

மேற்கொள்ளுமாறு கூறினார். அதன்படி தெற்குமலை மேற்குபீட் வனக்காப்பாளர் கிருஷ்ணமூர்த்தி, வடக்கு பீட் வனக்காப்பாளர் ஆல்வின் மற்றும் வேட்டை தடுப்பு காவலர் சிவதணிக்கை வேலன் ஆகியோரை போன் மூலம் வனச்சரக அலுவலகம் வரும்படி கூறினேன். அதன்படி அவர்கள் மூவரும் வனச்சரக அலுவலகம் வந்தவுடன் 3 பேர் குழுவாக தெற்குமலை மேற்கு மற்றும் கிழக்கு பீட் பகுதிகளுக்கு ரோந்து பணி செல்லுமாறு கூறினேன். அதன்படி அவர்கள் மூவரும் குழுவாக வனச்சரக அலுவலகத்தில் இருந்து 10.30 மணி அளவில் ரோந்து பணி சென்றனர். அதன் பின்னர் நான் தோவாளை முதல் மயிலாடி செல்லும் சாலையில் ரோந்து பணியில் ஈடுபடும்போது அப்போது மேற்குபீட் வனக்காப்பாளர் கிருஷ்ணமூர்த்தி 12 .10 மணி அளவில் என்னை போனில் தொடர்பு கொண்டு வனப்பகுதியில் வெடிச்சத்தம் கேட்பதாக கூறி என்னை அங்கு வரும்படி அழைத்தார். அதன்படி நான் 12.30 மணிஅளவில் அவர்களுடன் இணைந்து ரோந்து பணி மேற்கொண்டேன். அப்போது 12.50 மணி அளவில் மீண்டும் வனப்பகுதிக்குள் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. உடன் நாங்கள் சுதாரித்துக்கொண்டு வனப்பகுதிக்குள் ஆட்கள் யாரேனும் இருக்கலாம் என்று சந்தேகித்து வனப்பகுதியில் இருந்து வெளி வரும்பாதையில் புதர்க்குள் மறைந்து இருந்து கண்காணித்து கொண்டிருந்தோம். அதிகாலை 3.30 மணி அளவில் இரு சக்கர வாகனம் வருவதை பார்த்து அதை தடுத்து நிறுத்தினோம். அதில் இருவர் இருந்தனர். அவர்களை விசாரிக்கும்போது அதில் ஒருவர் தோப்பூரை சார்ந்த ஏசுவடியான் என்பவரும், வனப்பகுதியின் அருகில் உள்ள பூங்காவனம் தோட்டத்தில் காவலாளியாக வேலைபார்ப்பதாக சொன்னார். மற்றொருவரை விசாரித்ததில் அவர்

தோப்பூரை சார்ந்த டைசன் மாணிக்கம் என்பதும், அவர் ஏசுவடியான் என்பவர் மாமா முறை என்பதும் தெரியவந்தது. மேலும் அவர்களை விசாரிக்கும்போது சரியாக பதில் கூறாமல் முன்னுக்குப்பின் முரணாக பதில் சொன்னார். அவர் மேல் சந்தேகம் அடைந்து வனச்சரக அலுவலகத்தில் சென்று விசாரிக்கலாம் என்று எண்ணும் போது டைசன்மாணிக்கம் என்பவர் செல்போனிற்கு ஒரு அழைப்பு வந்தது. அதனை வனக்காப்பாளர் ஆல்வின் எடுத்து பேசியபோது எதிரே பேசியவர் ஆள் நடமாட்டம் உள்ளதா நாங்கள் வரலாமா என்று கேட்டார். உடனே நாங்கள் சுதாரித்து கொண்டு எதிரிகள் இருவரையும் என்வசம் வைத்துக்கொண்டு மூவரையும் ஆர்பிஆர் பாலம் அருகே புதருக்குள் மறைந்து இருக்கும்படி சொல்லிவிட்டு நாங்கள் காத்திருந்தோம். அதிகாலை 4.30 மணி அளவில் இருசக்கர வாகனம் வருவதை பார்த்து அதை அவர்கள் தடுத்து நிறுத்தினார்கள். ஆனால் அவர்கள் தடுத்தி நிறுத்திய மூவர் மீதும் மோதி வாகனத்தை கீழே போட்டு ஒரு நபர் தப்பி சென்றார். மற்றொரு நபர் தோவாளை கால்வாயில் குதித்து தப்பிக்க முயற்சி செய்தபோது கிருஷ்ணமூர்த்தி வனக்காப்பாளர் அவரை பிடித்துக்கொண்டார். பின்னர் அவரை விசாரிக்கும்போது அவர் காட்டுப்புதுரை சேர்ந்த ஸ்டிபன் ராஜ் என்றும், தப்பிச் சென்ற நபர் இறைச்சக்குளம் பகுதியைச் சேர்ந்த அஜித் என்ற கோட்சா என்பதும் தெரியவந்தது. பின் வாகனம் அருகே சென்று சோதனை செய்தபோது வாய் கிழிந்து இறந்த நிலையில் ஒரு ஆண் காட்டுப்பன்றியும், பேக்கை சோதனை செய்தபோது தோலுரிக்கப்பட்ட காட்டுப்பன்றியின் செப்பு மற்றும் விலாப்பகுதி இருந்தது. பின்னர் அவர்களை விசாரித்தபோது அவர்கள் 4

பேரும் சேர்ந்து காட்டுப்பன்றியை வேட்டையாடியதாக ஒப்புக்கொண்டார்கள். பின்னர் நாங்கள் வனச்சரக அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தோம். பின்னர் காட்டுப்பன்றியின் மீதமுள்ள கறி குறித்து விசாரித்போது , பூங்காவனம் தோட்டத்தில் வேலைபார்க்கும் ஏசுவடியார் என்பவருடைய அறையில் இருப்பதாக கூறினார்கள். பின்பு நாங்கள் அங்கு சென்று சோதனை செய்தபோதுஅங்கு காட்டுப்பன்றியின் மீதமுள்ள செப்பு பகுதி மற்றும் ஈரல் பகுதி இருந்தது. அதனை வெட்ட பயன்படுத்திய அருவா, 2 கத்தி, பிளேடு –1, வேட்டை நாய் –1, 2 இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றை கைப்பற்றினோம். எதிரிகளை எங்கு வெடிவைத்து வேட்டையாடினீர்கள் என விசாரித்தபோது அவர்கள் சுட்டிகாட்டிய பகுதி கன்னியாகுமரி வன உயிரின சரணாலயம் பூதப்பாண்டி வனச்சரகம் தெற்குமலை மேற்கு பீட் சூட்டுபொற்றை சரக வனப்பகுதியாகும், எனவே இவர்கள் வன உயிரின சரணாலத்தில் அத்துமீறி நுழைந்து வெடிகுண்டு வைத்து காட்டுப்பன்றியை வேட்டையாடியது தெரியவந்தது. பின்னர் கிருஷ்ணமூர்த்தி வனக்காப்பாளரால் ஸ்தல மகசர் மற்றும் எச் நமுனா தயார் செய்யப்பட்டது. பின்பு 2 முதல் 4 எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். பின்பு 1வது எதிரி அஜித் என்ற கோட்சா நீதிமன்றத்தில் சரணடைந்து காவல் அடைப்புக்கு உட்படுத்தப்பட்டு பின்பு அவரை வனச்சரக அலுவலர் காவல் அடைப்பிலிருந்த சமயத்தில் 15.2.2022 ஆம் தேதி அவரை வனச்சரக அலுவலர் விசாரித்தார். விசாரித்தபோது 1ம் எதிரி

அனைவரும் காட்டுப்பன்றியை வேட்டையாடியது ஒப்புக்கொண்டார். அப்போது 1வது எதிரி வெடி பொருட்களை ரோஸ்மியாபுரத்தில் குடியிருக்கும் 5வது எதிரி இசக்கிமுத்து என்பவரிடமிருந்து வாங்கியதாக கூறினார். 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலும் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். வழக்கு தொடர்பாக வனச்சரக அலுவலர் என்னை விசாரித்தார்.